“மழைநீர் சேமிப்போம்”                                                    “ பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் “

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 07.09.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி வருடம், ஆவணி மாதம் 22-ம் நாள் 07.09.2020-ம் தேதி திங்கள் கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையம் பிரதான நுழைவு வாயில் தெற்கு பக்க உணவகம் அருகில் உள்ள காலியிடம் குத்தகை இனம் அதிகப்படியான வாடகை காரணமாக தொடர்ந்து நடத்திட இயலாமல் 30-11-2020 முதல் நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டார். மேலும், மேற்கண்ட குத்தகை இனம் காலியிடமாக உள்ளதால், அதற்கான குத்தகை தொகையினை கீழ்கண்டவாறு குறைத்து நிர்ணயம் செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | குத்தகை இனம் | ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை | தற்போது நிர்ணயம் செய்யப்பட்ட முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் பிரதான நுழைவு வாயில் தெற்கு பக்க உணவகம் அருகில் உள்ள காலியிடம் | ரூ: 5,00,000/- | ரூ:3,00,000/- |

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1510

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 02 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2005039 | காமராஜர் பேருந்து முனைய கிழக்கு பக்கம் கடை எண்: 11 | 30-11-2020 முதல் |
| 2 | 125/LD02/00041 | புதிய பேருந்து நிலையம் பிரதான நுழைவு வாயில் தெற்கு பக்க உணவகம் அருகில் உள்ள காலியிடம் | 30-11-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடைகளை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1511

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 03 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி **காமராஜர் பேருந்து முனையம் கிழக்கு பக்க கடை எண்: 6** குத்தகை விடுவதற்கு 19-08-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திரு.M.S.திலகர், த/பெ. சங்கையா செட்டியார், 233, சுப்பன் தெரு, தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:5,500/-** |
| 2 | திரு.E.பிரேம்குமார், த/பெ. எம்.இலங்கேசுவரன், 202 F, சுப்பன் தெரு, தேனி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:6,000/-** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திரு.E.பிரேம்குமார்** என்பவர் மாத வாடகையாக **ரூ:6,000/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். காமராஜர் பேருந்து நிலையம் தற்போது பேருந்து முனையமாக செயல்படுவதால் பேருந்துகள் பயனிகளை இறக்கிவிட்டு மட்டும் சென்று விடுவதால் பேருந்து முயைத்தில் உள்ள கடைகளில் வியாபாரம் பெருமளவு குறைந்துள்ளது. அதன் காரணமாக தொடர்ந்து கூடுதலாக வாடகை செலுத்திட இயலாமல் மேற்கண்ட கடை குத்தகைதாரரால் 30-09-2020-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே 17-07-2020, 29-07-2020 மற்றும் 07-08-2020 தேதிகளில் மூன்று முறை ஏலம் கோரப்பட்டும் ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதிநிலையினை கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1107 / 2020 / அ-3**

**தீர்மான எண்:** 1512

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 04 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் ( 30.11.2020 ) வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2018005 | மேற்கு சந்தை கடை எண்: 17 | 30-11-2020 முதல் |
| 2 | 125/2018006 | மேற்கு சந்தை கடை எண்: 18 | 30-11-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடைகளை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1513

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 05 :</u>

2019ம் ஆண்டிற்கான படைவீரர்நலன் கொடி நாள் இலக்கினை எய்திடும் பொருட்டு நகராட்சிக்கு வரப்பெறும் கீழ்க்கண்ட பணிகளுக்கான விண்ணப்பங்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை வசூலித்து தனி வரவினமாக கொடிநாள் விற்பனை என்ற தலைப்பில் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வசூலிக்கப்படும் பிரிவு | தொகை (ரூ) |
|---|---|
| பிறப்பு மற்றும் இறப்பு சான்று | 50 |
| நகரளவை ஆவணம்(சர்வே நகல்) | 200 |
| அத்துமால்(நில அளவீடு செய்ய) | 200 |
| சொத்துவரிபெயர்மாற்றம் | 100 |
| குடிநீர் வரி பெயர்மாற்றம் | 100 |
| மாதாந்திர பட்டியல் (ML) | 200 |
| புதிய குடிநீர் இணைப்பு | 300 |
| கட்டிட அனுமதி மற்றும் இதர சான்றுகள் | 200 |

**<u>அலுவலககுறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2461 / 2018 /பி4**

**தீர்மான எண்:** 1514

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 06 :</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணிணிகள் மற்றும் பிரிண்டர்கள் ஆண்டு பராமரிப்பு மூலம் பணிகள் செய்வதற்கு கீழ்கண்ட 3 நிறுவனங்களில் இருந்து 17.08.2020–ம் தேதியன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற 3 நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| S. No | Item Description | Qty | நிறுவனத்தின் பெயர் மற்றும் விலைப்பள்ளிகோரிய தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | Mercury Software, Theni | JV Computer, Theni | Swetha Systems, Madurai |
| 1 | Service charge for Trouble shooting & Recification of Desktop Computer including installation of Opoerating System & necessary software | 1 Nos | 800 | 1000 | 1200 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | Service charge for Truoble shooting & Recifiction of Laptop computer including installation of Operating System & necessary software | 1 Nos | 800 | 1000 | 1200 |
| 3 | Service charge for Troble shooting & Recification of Laser Printer | 1 Nos | 700 | 900 | 1100 |
| 4 | Service charge for Trouble shooting & Rectifiction of Dot Matrix Printer | 1 Nos | 500 | 700 | 900 |

**<u>அலுவலகக்குறிப்பு</u> :–**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் Mercury Software, Theni நிறுவனத்தின் குறைந்த பட்ச விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) இப்பணிக்கான செலவித்தொகையினை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 498 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1515

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 07 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்புறச்சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.183.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான அனைத்து பதிப்புகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|---|
| 1 | Ravi Publicity Service , ( Times of India - Tamilnadu, Hidu Tamil Thisai - Tamilnadu ) | தமிழ் வளர்ச்சி ( ம ) செய்தித்துறை (விளம்பரம்) வெளியீட்டு ஆணை எண். 2806 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2020, நாள்.27.07.2020 | 66938 |

மேற்கண்ட தொகை ரூ.66938/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 163 / 2018 / இ1
**தீர்மான எண்:** 1516
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :

2020 - 2021-ம் ஆண்டு பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அல்லிநகரம் பேருந்து நிலைத்தில் பயணியற் நிழற்குடை கட்டுதல் பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் நாளிதழில் மாவட்ட அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ் நாளிதழ் | வெ.ஆ.எண். 92 / 2020 / செ / ம / தொ / அ / தேனி / நாள். 18.08.2020 | 16920 |

மேற்கண்ட தொகை ரூ.16920/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 163 / 2018 / இ1
**தீர்மான எண்:** 1517
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09 :

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021-ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்புறச்சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.183.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள்

மேற்கொள்ளுவதற்கு 17.08.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 18.08.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன்படி சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணிக்கான மொத்த மதிப்பீடு தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Thiru.Jeyamagesh, Bodinayakanur | 1,58,18,617.19 | 1,65,72,785.00 | 4.76 % அதிகம் |
| 2 | Thiru.S.Veluchamy, Aundipatti | | 1,69,75,950.00 | 7.31 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள Thiru.Jeyamagesh, Bodinayakanur என்ற ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 4.76 % கூடுதலாக உள்ளதால் விலை விகிதத்தினை குறைத்து தர கோரியதில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி அலுவலக மதிப்பீட்டினை விட 4.76 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் குழுவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

அ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள Thiru.Jeyamagesh, Bodinayakanur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.76 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியானது வரும் மழைகாலத்திற்கு முன்பே ஆரம்பித்து முடிக்க வேண்டி உடனடியாக பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை விட 4.76 % கூடுதலாக கோரிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1691 / 2020 / இ1,**

**தீர்மான எண்:** 1518
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 10 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.32 பங்களாமேடு பகுதியில் தற்போது புதியதாக காவல்துறை துணை கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் முகாம் அலுவலகம் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. மேற்கண்ட அலுவலகம் முன்புள்ள சாலையில் தெருவிளக்கு இல்லாத காரணத்தினால் இருட்டாக உள்ளது எனவும், மேற்கண்ட பகுதி இருட்டாக உள்ளது எனவும், பொதுமக்கள் மேற்கண்ட அலுவலகத்திற்கு வந்து செல்லும் பொருட்டு அலுவலகத்திற்கு முன்புறம் உள்ள மின் கம்பத்தில் மின் விளக்கு ஒன்று பொருத்தித்தர கோரியதன் பேரில் மேற்கண்ட இடத்தில் தெருவிளக்கு - 1 No அமைப்பதற்கு அதற்கான அனுமதி மற்றும் கட்டணத்தொகையினை தமிழ்நாடு மின் வாரியத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1924 / 2020 / இ2

**தீர்மான எண்:** 1519
**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி